கண்ணமங்கலப்பட்டி ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.நா.முனியராஜ்

ந.க.கே.வை\1625/2025 1625/B1/2025		நாள்: 23.07.2025
பொருள்	:	மனையிடம் - குடியிருப்புமனைப்பிரிவு - சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம் - கண்ணமங்கலப்பட்டி ஊராட்சி கண்ணமங்கலப்பட்டி கிராமம் - சர்வே எண்கள் 567/4A1,6A-ல் உள்ள இடத்தில் 8908 சதுரமீட்டர் மனை பரப்பில் அமைந்துள்ள ராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவிற்கான இடத்திற்கு ஒப்புதல் வழங்கி - உத்தரவிடல்.
படிக்கப்பட்டவை	:	1. அரசாணை எண்: 18 நகராட்சிநிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறை (M.A) நாள்: 04.02.2019 மற்றம் அரசாணை எண்:19 நாள்: 31.01.2020. 2. அரசாணை எண்:79 வீட்டுவசதி மற்றும் நகர் புறவளர்ச்சித்துறை நாள்: 04.05.2017 மற்றும் அரசாணை எண்:181 நாள்: 09.12.2020. 3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்:320/2022 வுஊீ-3 நாள்: 07.01.2022. மாவட்ட நகர் ஊரமைப்பு துறைதுணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் தொழில் நுட்பகடித எண்: G6Q5E4QZ/2025TCP, dated: 21.05.2025

உத்தரவு:

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம் - கண்ணமங்கலப்பட்டி ஊராட்சி கண்ணமங்கலப்பட்டி கிராமம் - சர்வே எண்கள் 567/4A1,6A-ல் உள்ள இடத்தில் 8908 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் சாலை ஒதுக்கீடு, மின்வாரிய ஒதுக்கீடு மற்றம் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட மனைகளில் எண்ணிக்கை 45 மேற்படி மனையிட வரைபடத்திற்கு பார்வை (1)-ல் கண்டுள்ளசிவகங்கை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படியும் மனைப்பிரிவிற்கு கோரப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளையும் மற்றும் உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம் இவைகளை சிங்கம்பணரி சார்பதிவகம் 1 புத்தகம் ஆணை எண்:1439/2025 பத்திரத்தின்படி கண்ணமங்கலப்பட்டி ஊராட்சிக்கு தானமாகபதிவு செய்யப்பட்டு மேற்படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மின்சாரவாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் சிங்கம்பணரி சார்பதிவகம் 1 புத்தகம் 1440/2025 பத்திரத்தின்படி தானமாகபதிவு செய்யப்பட்டு மின்வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பார்வை(4)-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களின் மனைப்பிரிவு ஒப்பதல் தொழில்நுட்ப கடித எண்: G6Q5E4QZ/2025/TCP, dated: 09.06.2025-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரர் மனைப்பிரிவிற்கு விண்ணப்ப கட்டணம் ரூ.1000/-ஐ மேற்படி கண்ணமங்கலப்பட்டி பஞ்சாயத்து இந்தியன் வங்கியில் இணையதளத்தின் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது மேலும் நிலத்திற்கான சந்தை மதிப்பில் 3% சதவிகிதம்படி தொகை ரூ.3760/-ம் மேலும் கூராய்வுக் கட்டணம் 45X1000 மனைக்கு தொகை ரூ.45000/- மற்றும் இதரக்கட்டணம் தொகை ரூ.100775/- கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

சிவகங்கை நகர் ஊரமைப்புத் துறையின் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் எண்: L.P(SWP)DTCP/Sivagangai, No.82/2025)-ன்படி மேற்படி மனைப்பிரிவு ஊராட்சி ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மொத்தமனைகள் 45-க்கும் நிபந்தனைகளுக்கு. உட்பட்டு ராஜேஸ்வரி நகர் மனைப்பரிவுக்கு கண்ணமங்கலப்பட்டி ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் அரசு ஆணை ந.க.எண். 1125/25 படி ஒப்பதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு: வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

நகல்:

23/7/25
தனி அலுவலர்
கண்ணமங்கலப்பட்டி ஊராட்சி
சிங்கம்புணரி ஒன்றியம்

1.சார்பதிவாளர்,சிங்கம்புணரி
சார்பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை மாவட்டம்.

2.பூவரசி,
த/பெ.திரமாறன்,
அயன்பாண்டாங்குடி,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

3.Chairperson, Tamilnadu Real Estate Regulatory Authority
(TNRERA) CMDA Tower II 1st Floor No.1A
Gandhi Irwing Bridge Road,
Egmore, Chennai 600 008.